செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

நாள்: 04.10.2024

# தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வருணன்

## Varuṇaṉ in the Heritage of Tamil Classical Literature

### பயிலரங்கம் - 13

(06.11.2024 - 12.11.2024)

பழந்தமிழர்கள் இயற்கையை வழிபட்டு வந்ததன் தொடர்ச்சியாக, தாங்கள் வாழ்ந்து வந்த நிலத்தின் அடிப்படையில் வழிபாட்டு முறைகளைக் கடைபிடிக்கத் தொடங்கினர். இவ்வகையில் தமிழர் மரபில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைக்குரிய வழிபாடு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் போற்றப்படுகிறது. திணைக்கடவுள்கள் பற்றி எடுத்துரைக்கும் தொல்காப்பியம்,

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே” (தொல்.அகத்.5)

என்று கூறுகிறது. இதில் பாலைத் திணை தவிர்த்து நான்கு திணைக் கடவுள்கள் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ஏனெனில், `பாலை’ என்பது தனி நிலம் அல்ல. குறிஞ்சியும் முல்லையும் மழை இல்லாமல் காய்ந்து போன நிலமே பாலை எனப்படும். எனினும், பாலைக்கும் தெய்வம் உண்டு என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு திணை மக்களும் மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை என்றவாறு ஒவ்வொரு கடவுளை வழிபட்டனர்.

வருணன் என்பவன் தமிழர் வகுத்த திணைக் கடவுள்களில் நான்காவதாகச் சொல்லப்படும் நெய்தல் நிலத் தெய்வமாவான். சங்க இலக்கியங்களில் வருணன் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே குறிப்பிட்டிருப்பினும் சிலப்பதிகாரம் வருணனைக் கடல் தெய்வம் எனக் கூறுகிறது. ”கரியமலர் நெடுங்கண் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக்காட்டி அரியசூள் பொய்த்தார் அறனிலரென்று ஏழையம் யாங்கு அறிகோம்

ஐய" (சிலம்பு - கானல்வரி -5). தொடர்ந்து தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் நெய்தல் நிலப்பாடல்களும் வருணன் பற்றிய குறிப்புகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

கடல் சார்ந்த நிலத்தில் துறைவன், சேர்ப்பன், பரத்தி, பரதவர், பரத்தியர், நுளைச்சி, நுளையர், நுளைச்சியர், அளவர் என்போர் நெய்தல் நிலத்து மக்கள் ஆவர். வருணன் ஆகாயத்தைக் குறிப்பவர். வருணன் மேகம், மழை, ஆறு, கடல் என்று நீர் நிலைகளுடன் தொடர்புடைய நீர்க்கடவுள். உலகம் முழுவதும் பரந்து இருப்பவர். `உலகத்தையே ஆள்பவர்' என்று அழைக்கப்படுவதும் உண்டு.

நெய்தல் நில மக்கள் முத்துக்களையும், வலம்புரிச் சங்குகளையும் காணிக்கையாகச் செலுத்தி, தங்கள் கடல் தெய்வத்தை வழிபட்டனர். சிலப்பதிகாரத்தில் மாதவி, கோவலன் அல்லாத வேறொருவனை தான் காதல்கொண்டது போல் பாடியதை மன்னிக்க வேண்டி கடல் தெய்வமான வருணனை வழிபடுகிறாள். "துயர் எஞ்சு கிளவியால் பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று மாக்கடல் தெய்வத்தின் மலரடி வணங்குதும்" (சிலம்பு.கானல்வரி - 51)

தமிழ் இலக்கியப் பரப்பில் கம்பராமாயணம் போன்ற காப்பியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் நாட்டார் வழக்காறுகளிலும் வருணன் வழிபாடுகள் விரவிக் காணப்படுகின்றன. தமிழர் வழிபாட்டு மரபில் நெடுங்காலமாக இருந்துவரும் நெய்தல் நிலத் தெய்வமான வருணனின் சிறப்புப் பற்றியும் நெய்தல் நில மக்கள் வாழ்வியல் பற்றியும் ஆய்வு மாணவர்களுக்கு விளக்கும் வகையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் '**தமிழ்ச் செவ்விலக்கிய மரபில் வருணன்**' என்னும் பொருண்மையில் ஏழு நாள் (06.11.2024-12.11.2024) பயிலரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கில் வருணன் வழிபாட்டின் தொன்மை, நெய்தல் நில மக்களின் வாழ்வியல் அதன் தொடர்ச்சி குறித்துப் பேரறிஞர்கள் ஆய்வுரை நிகழ்த்த உள்ளனர். தமிழரின் வழிபாட்டு மரபுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் தமிழியல் மாணவர்கள் (**முனைவர்பட்ட ஆய்வாளர்கள்**) இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

## பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை - **30**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்:**06.11.2024** முதல் **12.11.2024** முடிய ஏழு நாட்கள்.

- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/zSw3UBzm3W6paStLA என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR-code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 22.10.2024. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 23.10.2024. அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் 28 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

இயக்குநர்